[1982 செப்டம்பர் 7

கால்நடை மருந்தகங்களில் உள்ள முறைகேடுகள்

*வினா எண் 20—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருந்தகத்தில் மருந்து வாங்குதல், இருப்பு வைத்தல், செலவழித்தல் மூன்றும் கால்நடை மருத்துவர் பொறுப்பில் உள்ளதால் முறைகேடுகள் நடப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மற்றும் (ஆ): கால்நடை மருந்தகங்களுக்கான மருந்துகள் வாங்குதல், சம்பந்தப்பட்ட கால்நடை உதவி இயக்குநரின் பொறுப்பில் உள்ளது. மருந்துகளை இருப்பு வைத்தலும் செலவழித்தலும் கால்நடை உதவி மருத்துவரின் பொறுப்பிலுள்ளது. எனவே முறைகேடுகள் நடப்பதற்கு வாய்ப்பில்லை.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, கால்நடைகளின் நோய்களுக்காக ஒவ்வொரு ஆண்டும் 2,000 ரூபாய், 5,000 ரூபாய் என்று ஒரு குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கி இருக்கிறார்கள். எனவே கிராமங்களில் இருந்து வருபவர்களிடம் மருந்துகள் இல்லை என்று சொல்லிவிட்டு சீட்டுக்களை எழுதிக் கொடுத்து வெளியிலே வாங்கி வரும்படி சொல்கிறார்கள் என்று தெரிய வருகின்றது ஆகவே கால்நடைகளுக்கு எவ்வளவு மருந்து தேவையோ அவை முழுவதையும் வாங்கி வைத்து இலவசமாக வைத்தியம் செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒவ்வொரு பிரதம மருத்துவ மனைக்கும் ரூ. 30,000 மதிப்புள்ள மருந்துகளும், கால்நடை மருத்துவ மனையாக இருந்தால், அதற்கு ரூ. 15,000 மதிப்புள்ள மருந்துகளும், கால்நடை மருந்தகமாக இருந்தால் அதற்கு ரூ. 10,000 மதிப்புள்ள மருந்துகளும், கிளை நிலயமாக இருந்தால் அதற்கு ரூ. 1,500 மதிப்புள்ள மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன. இந்த மருந்துகளைப் பாதுகாத்து, கால்நடைகளுக்குக் கொடுப்பதற்குச் செலவினப் பொருள்கள் பதிவேடு என்ற பதிவேட்டில் முக்கிய மருந்துகள் பதியப்படுகின்றன. அந்தப் பதிவேட்டில் என்ன மருந்துகளை வாங்கினார், இருப்பு வைப்பது, செலவழிப்பது போன்றவற்றை அந்தப் பதிவேட்டில் குறிப்பிட்டு, அதற்குரிய ஆய்வு செய்யப்பட்டு, அதற்கு சர்டிபிகேட் கொடுக்கப்பட்டு, அந்த வகையில் மருந்துகள் கால்நடைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன.

1982 செப்டம்பர் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பேரவை அலுவல்

திரு. ரா. உமாநாத்: பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் கூறியபடி, இந்த செஷனில் சில ஐடம்களை மட்டும் எடுத்து முடிப்பது என்பது அரசாங்கத்தின் தரப்பிலும், எதிர்க் கட்சிகள் தரப்பிலும் ஒரு அன்டர்ஸ்டான்டிங்கில் முடிவு செய்யப்பட்டது. அந்த அன்டர்ஸ்டான்டிங்கின் படி பாக்கிப் பிரச்னைகளைப் பற்றி முடிவெடுப்பதற்கு இன்னொரு செஷன், அதாவது பெரியகுளம் இடைத் தேர்தலுக்குப் பிறகு என்று எல்லோரும் சேர்ந்து ஒத்துக்கொண்டு, முடிவெடுத்ததன் அடிப்படையில்தான் அது பைனலைஸ் செய்யப்பட்டது. வருகிற அக்டோபரிலோ அல்லது நவம்பரிலோ பேரவையின் கூட்டத்தை வைக்கலாம் என்ற அடிப்படையில் ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிறது. நவம்பர் மாதம் தாங்கள் சுற்றுப்பயணத்திற்கு போகிறபடியால், அவையை ஒத்தி வைக்கவேண்டிய அவசியமில்லை என்று, நீங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நிச்சயமாக நவம்பரில் வைப்பது என்ற ஒரு அன்டர்ஸ்டான்டிங் இருக்கிறது. எல்லோருக்கும் நான் அதைத் தெரியப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அலுவல் ஆய்வுக் குழுவில் சொன்னதை, இங்கே அவர்கள் ரெகார்ட் செய்கிறார்கள். அவ்வளவுதான்.

(ஆ) விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் தமிழகத்தில் லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். தங்களுக்கு ஊதிய உயர்வு ஒருங்கிணைந்த சட்டத்தின் மூலமாக வேண்டுமென்று கேட்டார்கள். அந்தச் சட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தைக் கேட்டபோது, அந்தச் சட்டம் தேவையில்லை என்று நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அதன் விளைவாக இந்த விவசாயத் தொழிலாளர்களிடையே இன்றைக்குக் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடு.) மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சராக இருந்தாலும் அல்லது விவசாயத் துறை அமைச்சராக இருந்தாலும், விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்கு ஒருங்கிணைந்த சட்டத்தின் மூலம்.. .. ..

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS